# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 018/2016/பே

ஆணை எண்: 106/2017

நாள்: 11/05/2017

திரு. B. செந்தில் குமார்,
2வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் - 638 104. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
மொடக்குறிச்சி. ஈரோடு மாவட்டம். – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி, 2வது வார்டு முன்னாள் உறுப்பினர் திரு. B. செந்தில்குமார் அவர்களின் 05.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 018/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களாகிய பேரூராட்சி செயல் அலுவலர்களின் விளக்க அறிக்கைகள், வாக்குமூலங்கள் மற்ற பிற ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

## ஆணை

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி 2வது வார்டு முன்னாள் உறுப்பினர் திரு. B. செந்தில்குமார் தனது 05.01.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில், மொடக்குறிச்சி பேரூராட்சி

பகுதியில் உள்ள முள் வேலி மரங்கள் மற்றும் பலவகையான மரங்களை அரசு விதிகளின்படி முறையாக ஏலம் விடப்படாமலும், அவ்வாறாக வெட்டப்பட்ட மரங்கள் தமிழக நெடுஞ்சாலைத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளுக்கு பாத்தியப்பட்ட இடங்களாகயிருந்தும் அத்துறைகளிடமிருந்து எவ்வித முறையான அனுமதி பெறாமலும் அதிக தொகைக்கு (பல இலட்ச ரூபாய்) விற்று பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் அவரது கணவர் ஆகியோர் தக்க பண ஆதாயம் அடைந்ததற்கும் சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுவின் குற்றச்சாட்டு சம்பந்தமாக மொடக்குறிச்சி பேரூராட்சி அப்போதைய செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பெறப்பட்டது. அவ்வறிக்கயில், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை WP (MD) எண்.16485 & 16645/2015 நாள்:28.10.2015ல் சீமைக் கருவேல மரங்களை அழிக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் பேரிலும், பேரூராட்சி இயக்குநரின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் பேரிலும், பேரூராட்சியின் மூலம் துண்டு பிரசுர விளம்பரத்தில் சீமைக் கருவேல மரங்களை பொது மக்களே அகற்றிக் கொள்ளவேண்டுமென்றும், இல்லையெனில் பேரூராட்சி நிர்வாகம் மூலம் அகற்றப்படும் என விளம்பரம் செய்யப்பட்டது எனவும், அவ்வாறு அகற்றி கொண்டமைக்கு ஆதாரமாக உள்ள புகைப்படங்களின் நகல்களையும் துண்டு பிரசுரங்கள் நகல்களையும் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார். அதிக தீமை தரும் நச்சுத்தன்மை கொண்ட சீமைக் கருவேல மரங்களை வெட்டிக் கொள்ள எந்த ஒரு தனி நபர்களுக்கும் பேரூராட்சி அனுமதி வழங்கவில்லை என்றும் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரரிடமும், சம்பந்தப்பட்ட செயல் அலுவலரிடமும் முறையே 01.02.2017 மற்றும் 02.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

01.02.2017 அன்று நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரர் தனது வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"பேரூராட்சி பகுதியில் அரசு இடங்களில் முள் வேலி மற்றும் பலவகையான மரங்கள் அகற்றப்பட்ட பணி குறித்து பேரூராட்சி மக்களுக்கு தெரியும் வகையில் எந்தவித விளம்பரமும் செய்யாமலும் முறைப்படி ஏலம் விடாமலும் பேரூராட்சி மூலம் ஏலம் வாய் வழி மூலமாக ஏலம் திரு. பழனிச்சாமி மற்றும் சிலருக்கு விட்டதாகவும் அதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு என்றும், பொது

மக்கள் யாரும் இப்பணியில் ஈடுபடுத்தப்படவில்லை என்றும் வருவாய் இழப்பினை பேரூராட்சி திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

02.02.2017 அன்று நடைபெற்ற விசாரணையின் போது சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் திருமதி. S. டார்த்தி தனது வாக்குமூலத்தில் கீழ்கண்ட விவரங்கள் தெரிவித்துள்ளார்:-

*" சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணைக்கிணங்கவும் மற்றும் பேரூராட்சியினுடைய இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோரின் அறிவுரைகளின்படியும் சீமை கருவேல மரங்களை வெட்ட நடவடிக்கை எடுத்தோம் என்றும் அப்பகுதி மக்களே முன்வந்து நீர் ஆதாரத்தினை காக்கும்பொருட்டும் அருகில் உள்ள விவசாய நிலத்தை கருத்தில் கொண்டும் அவர்களாகவே அகற்றி கொண்டார்கள் என்றும் கருவேல மரங்களை தவிர பிற மரங்கள் எதையும் அகற்றவில்லை என்றும் திரு. பழனிசாமி என்பவர் எனக்கு யார் என்று தெரியாது என்றும் அந்த பகுதியில் உள்ள மக்களே முட்செடிகளை அகற்றி அவைகளை எடுத்துச்சென்றனர் என்றும் கான்ராக்டர் திரு. பழனிசாமி என்ற ஒரு கான்ராக்டர் இல்லை என்றும் அவருக்கு எந்த பணியும் நான் இருந்த காலம் வரை பேரூராட்சியில் இருந்து கொடுக்கப்படவில்லை" என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

மேற்கூறிய நிலையில், முறையீட்டு மனு, மனுதாரரின் வாக்குமூலம், செயல் அலுவலர்களின் அறிக்கை, வாக்குமூலங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதில் பேரூராட்சி துண்டு பிரசுர விளம்பரங்கள் மூலம் பொது மக்கள் முள்வேலி மரங்களை அகற்றி கொண்டுள்ளனர். என்றும், கருவேல மரங்கள் தவிர பிற மரங்கள் அகற்றப்படவில்லையென்றும், இதனால் பேரூராட்சி ஏலம் எதனையும் விடவில்லையென்றும் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏதும் இல்லை எனக் கருத வேண்டியுள்ளது. மேலும் மனுதாரர் அன்னாரது புகார்களுக்கு தகுந்த ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை, மேலும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்திரவின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்பார்வையின் கீழ் மேற்படி கருவேல மரங்கள்

வெட்டப்பட்டு வருகிறது, இப்பணி அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், இந்நேர்வில் மேல் உத்தரவுகள் எதுவும் வழங்க தேவையில்லை எனக் கருதி இவ்வழக்கினை முடித்து வைக்க முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 11 -ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை-600 032

-//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

12.5

<u>பெறுநர்</u>
திரு. B. செந்தில் குமார்,
2வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் - 638 104.

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
மொடக்குறிச்சி. ஈரோடு மாவட்டம்.